# 10 ஆண்டு பா.ஜ.க. ஆட்சியும் சுற்றுச்சூழல் சீர்கேடும்



தொகுப்பு:

**பூவுலகின் நண்பர்கள்**

**10 ஆண்டு**
**பா.ஜ.க. ஆட்சியும்**
**சுற்றுச்சூழல் சீர்கேடும்**

தொகுப்பு:
**பூவுலகின் நண்பர்கள்**

முதல் பதிப்பு:
**மார்ச் 2024**

நூல் வடிவமைப்பு:
**M CREATIVE**

அச்சாக்கம்:
**ஜோதி எண்டர்பிரைசஸ்,**
சென்னை - 600 005

**காலநிலை பதிப்பகம்**
எண் 72, 3ஆம் குறுக்குத் தெரு, அஞ்சுகம் நகர், மேற்கு ஜாபர்கான்பேட்டை,
சென்னை 600083
Mobile: 7708381260
Email: kaalanilaipathippagam@gmail.com

வெளியீடு:
**பூவுலகின் நண்பர்கள்**



# 1. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கடைசி இடம்



| ENVIRONMENTAL PROTECTION INDEX | |
|---|---|
| Sudan | 27.6 |
| Turkey | 26.3 |
| Haiti | 26.1 |
| Liberia | 24.9 |
| Papua New Guinea | 24.8 |
| Pakistan | 24.6 |
| Bangladesh | 23.1 |
| Viet Nam | 20.1 |
| Myanmar | 19.4 |
| **India** | **18.9** |

Environmental Performance Index என்பது ஒரு நாட்டின் சூழல் பாதுகாப்பு செயல்பாட்டினைப் பொருத்து அந்த நாட்டிற்கு வழங்கப்படும் மதிப்பெண் ஆகும். 2002ம் ஆண்டு முதல் நாடுகளின் சூழல் பாதுகாப்பு செயல்பாடுகளை ஆராய்ந்து EPI மதிப்பெண் அடிப்படையில் தரவரிசை வழங்கி வருகிறது அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைகழகம். இப்பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கும் 2022 ம் ஆண்டிற்கான தரவரிசையில் ஒட்டு மொத்த சூழல் பாதுகாப்பு செயல்பாடுகளில் வெறும் 18.90 மதிப்பெண்களுடன் இந்தியாவிற்கு கடைசி இடமான 180 இடம் வழங்கப்பட்டுள்ளது.

## ENVIRONMENT PERFORMANCE INDEX

NEIGHBOURHOOD: WHERE INDIA STANDS

| | | | |
|---|---|---|---|
| Afghanistan | 81 | Pakistan | 176 |
| Sri Lanka | 132 | Bangladesh | 177 |
| China | 160 | India | 180 |
| Nepal | 162 | | |



TOP 5: Denmark, UK, Finland, Malta, Sweden

இலங்கை, பாகிஸ்தான், வங்காள தேசம், வியட்னாம், பர்மா போன்ற எந்த தெற்காசிய நாடுகளையும் விட, ஆப்பிரிக்க நாடுகளையும்விட சூழல் பாதுகாப்பிற்கான தரவரிசையில் இந்தியா பின்தங்கி கடைசி இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது1.

இந்த யேல் பல்கலைகழக ஆய்வில் காலநிலை மாற்றத்திற்கு எதிரான செயல்பாடுகள் மற்றும் கொள்கைகள், காற்றின் தரம், கன உலோக மாசுபாடு, கழிவு மேலாண்மை, நீர் மேலாண்மை, சுகாதாரம், உயிர்ப்பன்மையப் பாதுகாப்பு, கடல் வளம், பாதுகாப்பான வேளான்மை,

### SOME KEY INDICATORS, AND INDIA

| | | | |
|---|---|---|---|
| Biodiversity | 179 | Green House Gas emissions | 171 |
| Protected Areas | 177 | Biodiversity habitat index | 170 |
| Species Protection Index | 175 | PM 2.5 | 174 |
| Air Quality | 179 | Waste management | 151 |
| Climate Policy | 165 | | |
| Ecosystem vitality | 178 | | |

பசுமைப் பரப்பு போன்ற காரணிகள் மதிப்பிடப்பட்டு அதற்கு ஏற்ப மதிப்பெண்கள் வழங்கப்படும்.

இதில் காலநிலை கொள்கையில் 165 வது இடமும், காற்று மாசுபாட்டில் 170 வது இடமும், உயிர் பன்மைய பாதுகாப்பில் 179 வது இடமும், கன உலோக மாசுபாட்டில் 174 வது இடமும், குப்பை மேலாண்மையில் 151வது இடமும் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# 2. காடழிப்பில் வேகம்

உலகத்தில் எங்கெல்லாம் வலதுசாரி சிந்தனை கொண்ட தலைவர்கள் ஆட்சி செய்கிறார்களோ அங்கெல்லாம் இயற்கை வளங்கள் அதிகமாகச் சுரண்டப்படுகின்றன. அதற்கு ஒரு எடுத்துக்காட்டு பிரேசிலின் முன்னாள் அதிபர் போல்ஸ்னாரோ. அவர் தான் ஆட்சிக்கு வந்தால் அமேசான் காடுகளை அழித்து நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவேன் என தேர்தல் வாக்குறுதி தந்து ஆட்சி அமைத்தவர், அவர் பதவியில் இருந்த காலத்தில்தான் பிரேசிலில் 16,95,700 எக்டர் காடுகள் அழிக்கப்பட்டன. அதேபோல் இந்தியாவில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு காடழிப்பு அதிகரித்துள்ளதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன, லண்டனின் Utility Bidder நிறுவனம் நடத்திய ஆய்வில்2 உலகிலேயே பிரேசிலுக்கு அடுத்தபடியாக காடழிப்பில் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது எனவும்,2015 முதல் 2020 வரையிலான மோடியின் ஆட்சிக்காலத்தில் மட்டும் 6,68,400 எக்டர் காடுகள் இந்தியாவில் அழிக்கபட்டுள்ளன எனவும் தெரியவந்துள்ளது. 6,68,400 எக்டர் என்பது தலைநகர் டெல்லியின் பரப்பளவைவிட 4.5 மடங்கு அதிகமாகும்.

WRI-World Resource Institute வெளியிட்டிருக்கும் மற்றொரு அறிக்கையின் படி3 2014-2018 வரை பா.ஜ.க. ஆட்சியில் இந்தியாவில் அழிக்கப்பட்ட அடர்ந்த காடுகளின் பரப்பளவு 2009-2013 UPA ஆட்சிக் காலத்தில் அழிக்கப்பட்ட காடுகளின்

| | Country, Continent | 🌲 |
|---|---|---|
| 1 | **Brazil** South America | 1,695,700 |
| 2 | **India** Asia | 668,400 |
| 3 | **Indonesia** Asia | 650,000 |
| 4 | **Tanzania** Africa | 474,000 |
| 5 | **Australia** Oceania | 416,840 |
| 6 | **Myanmar** Asia | 293,920 |
| 7 | **Paraguay** South America | 279,340 |
| 8 | **Mozambique** Africa | 267,030 |

பரப்பைவிட36% அதிகம் என்று அந்த அறிக்கை கூறுகிறது. காடுகளை நிர்வகிப்பதில் people-centric approach இல் இருந்து பெரும் அளவு விலகி industry-centric and technocratic approach ஆக மாற்றியுள்ளது பா.ஜ.க.. வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரில் பல்லாயிரம் எக்டர் காடுகள் சூறையாடப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு, செப்டம்பர் 2017ம் ஆண்டு 3000MW Dibang Hydro Electric திட்டத்திற்கு அனுமதி வழங்கியதன் மூலமாக அருணாச்சல பிரதேசத்தில் உள்ள 4500 ஹெக்டர் காடுகள் அழிக்கபட்டன. ஆகஸ்ட் 2016 இல் Ken-Betwa நதி நீர் இணைப்பிற்காக மத்திய பிரதேசத்தில் புலிகள் சரணாலயமாக இருக்கும் சுமார் 89 சதுர கிலோ மீட்டர் காடுகள் அழிவின் அபாயத்தில் தள்ளப்பட்டன. ஜார்கண்டில் ஆகஸ்ட் 2015 இல் kutku Mandal அணை கட்ட அனுமதி


வழங்கியதன் மூலம் 119 சதுர கிலோ மீட்டர் அளவிலான காடுகளை நாம் இழந்திருக்கிறோம்.

பெரும் நிறுவங்களுக்கும் வளர்ச்சித் திட்டங்களுக்கும் விரைந்து சூழலியல் அனுமதி வழங்குவதற்காக 600 நாட்களாக இருந்த சூழலியல் அனுமதி வழங்கும் கால அவகாசத்தை 170 நாட்களாக பா.ஜ.க அரசாங்கம் குறைத்ததினால் தரமான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டாய்வு (Environmental Impact Assessment) செய்யப்படாமலும் மக்களின் பிரச்சனைகள் கேட்கப்படாமலும் அவசர அவசரமாக அழிக்கப்பட்ட காடுகளின் பரப்பளவு ஏராளம்.

2014ம் ஆகஸ்ட் மாதம் தேசிய காட்டுயிர் வாரியதிற்கான -National Board for Wildlife (NBWL) சுயேட்சையான உறுப்பினர்களின் எண்ணிகையை 15ல் இருந்து 3 ஆக குறைத்தது பா.ஜ.க. அரசு. அதிக எண்ணிகையில் அரசுத்துறை சார்ந்த நபர்கள் உறுபினர்கள் குழுவில் இடம் பெறுவது குழுவின் முடிவுகளில் அரசின் தலையீடு அதிகம் இருப்பதற்கு வழிவகுத்தது13. இதனால் காடழிப்புத் திட்டங்களுக்கான அனுமதி எளிதில் வழங்கப்பட்ட்ய் வந்தது.

2014 முதல் 2019ம் ஆண்டு வரை NBWL அனுமதிகோரி வின்ணப்பிக்கப்பட்ட 687 திட்டங்களில் 682 (99.82%) திட்டங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதே காங்கிரஸ் ஆட்சி காலத்தில் (UPA 2) ஐந்து ஆண்டுகளில் சமர்பிக்கப்பட்ட 328 திட்டங்களில் 260 (80%) திட்டங்களுக்கே மட்டுமே தேசிய காட்டுயிர் வாரியத்தின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது14.

இது போதாதென்று ஒன்றிய அரசு2023 வனப்பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதாவை(The Forest(Conservation)Amendment Bill 2023) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது.காடு என்கிற வரையறைக்குள் வருகின்ற




பகுதிகள் அனைத்திலும் காடு சாராத திட்டங்கள் அதாவது நெடுஞ்சாலைகள் அமைப்பது, சுரங்கங்கள் அமைப்பது, அணைகள் கட்டுவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது தேவைக்கு அதிகமாகவோ அல்லது தேவையில்லாமலோ காடுகள் அழிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டதுதான் வனப் பாதுகாப்புச் சட்டம்1980. வனப் பாதுகாப்புச் சட்டம்1980ல் இத்திருத்தமானது காட்டிற்குள் மற்றும் காட்டுப்பகுதியை ஒட்டி வாழும் பழங்குடிகள் மற்றும் இதர பிரிவு மக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடியதும் அவர்கள் அன்றாட வாழ்க்கையில் தாக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியதாகும். மேலும், இத்தனை ஆண்டுகாலம் காடுகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட அத்தனைச் சட்டங்களையும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளையும் நீர்த்துப்போகச் செய்யும் வகையில் இத்திருத்தம் அமைந்தது.

தேச முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் நாட்டின் பாதுகாப்பு மற்றும் ராணுவம் சார்ந்த திட்டங்களுக்கு (Strategic and security projects of national importance) வனப் பாதுகாப்புச்

சட்டத்தின் கீழ் முன் அனுமதி பெறுவதிலிருந்து விலக்களிக்கிறது இம்மசோதா. காடுகளில் அமைந்துள்ள ரயில்பாதைகள், சாலைகள் ஆகியவற்றைச் சுற்றியுள்ள 0.10 ஹெக்டேருக்கு மிகாத பகுதிகளில் வனப் பாதுகாப்புச் சட்டத்தின் விதிகள் செல்லாது எனவும் திருத்தம் கூறுகிறது. உதாரணத்திற்கு தேனி மாவட்டத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள நியூட்ரினோ ஆய்வகத்தை தேச முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக அறிவித்துதான் மாநில அரசால் சுற்றுச்சூழல் அனுமதி மறுக்கப்பட்ட பின்னரும்கூட ஒன்றிய அரசால் அதற்கான சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட்டது. இப்படியான திட்டங்களை தேச முக்கியத்துவம் என்கிற பெயரில் செயல்படுத்துவது காடுகளை துண்டாக்கும் முயற்சியாகும். இதனால் காட்டுயிர்களின் வாழிடம் சுருங்குவதால் அவை காட்டை விட்டு வெளியேறும்.

இந்தியாவில் அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கும் காடுகளைத் தவிர தனியாருக்குச் சொந்தமான காடுகளும் உள்ளன. இத்தகைய பகுதிகளில் காடுகள் பாதுகாப்பு சாராத திட்டங்களை செயல்படுத்த முடியாது.இந்த வனப்பகுதிகளில் பயிர் செய்வதற்கும் வேறு பல கட்டுமானங்கள் மேற்கொள்ளவும் வனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விலக்கு அளிக்க இம்மசோதா முயல்கிறது. தமிழ்நாட்டில் உள்ள காப்புக் காடுகள் மற்றும் புலிகள், யானைகள் போன்ற சரணாலயங்களில் பல எக்டர் பரப்பளவில் தனியாருக்குச் சொந்தமான காடுகள் உள்ளன. இவற்றை வனப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விலக்கினால் வணிக நோக்கில் அந்த இடங்களில் பணப்பயிர்கள் விதைக்கப்பட்டு மரங்கள் வெட்டப்படும். மழைக்காடுகளில் உள்ள மரங்கள் வெட்டப்பட்டால் பெருமளவில் மண் அரிப்பு நிகழும்.

இந்தியாவில் சில வனப்பகுதி நிலங்கள் வருவாய்த்துறை மற்றும் வனத்துறை ஆகிய இரண்டு துறைகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே 12.12.1996

க்கு முன்பாக காடுகள் சாராத பிற திட்டங்களுக்காக நிலப்பயன்பாடு மாற்றம் செய்யப்பட்ட பகுதிகளை இச்சட்டம் கட்டுப்படுத்தாது எனவும் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்லது. இதன் மூலமும் எந்த வரையறையுமில்லாமல் வணிக நோக்கில் அந்த நிலங்களின் நிலப்பயன்பாடு மாற்றப்படும் அபாயம் உள்ளது.

Extended Reach Drilling எனும் தொழில்நுட்பத்திற்கான அனுமதி குறித்தும் மறைமுகமாக இச்சட்ட மசோதா குறிப்பிடுகிறது. காடுகளுக்கு அடியில் பல ஆயிரம் அடி ஆழத்தில் இருக்கும் இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் வளங்களை காடு என்பதற்கான சட்ட வரையறைக்குள் வராத ஒரு இடத்திலிருந்து துளையிட்டுச் சென்று அவ்வளங்களை எடுப்பதுதான் இந்த தொழில்நுட்பத்தின் அடிப்படை. இந்த தொழில்நுட்பத்தால் காட்டின் இயற்கையான இயங்கியல் தன்மை முற்றிலுமாக பாதிக்கப்படும். மெட்ரோ ரயிலுக்காக சுரங்கம் தோண்டிவிட்டு மேற்பரப்பில் மரங்களை நட்டு வைப்பதை நாம் பார்க்கிறோம். அதை நம்மால் காடு என ஒப்புக்கொள்ள முடியுமா? அதைப்போலத்தான் Extended Reach Drilling என்கிற தொழில்நுட்பத்தையும் நாம் நிராகரிக்க வேண்டும். காடு என்பது சில மரங்களும்,அது ஊன்றியிருக்கும் மண்பரப்பும், அதற்கடியிலிருக்கும் வேரும் மட்டும் கிடையாது. பல ஆண்டு காலமாக நிலத்திற்கடியில் பல அடி ஆழத்தில் சேர்ந்த வளங்களை வெளியிலிருந்து உறிஞ்சு எடுத்து விட்டால் மேற்பரப்பு காட்டில் எதுவும் மிஞ்சாது. இந்த நடவடிக்கையை அனுமதிப்பதற்காக காட்டில் உள்ள பல்வேறு வகையான கனிமங்கள், வளங்களை ஆய்வு செய்வதற்கும், களமுன் அளக்கை செய்வது, நில அதிர்வுச்சோதனை செய்வது போன்ற செயல்பாடுகளை காடுகள் பாதுகாப்பு சார்ந்த திட்டமாக அரசால் அறிவிக்க முடியும் என இத்திருத்தம் கூறுகிறது.

அடுத்ததாக வன உயிரியல் பூங்காக்கள், வன உலாக்கள் போன்றவற்றை காடு பாதுகாப்பு சார்ந்த திட்டங்களாகக் கருத ஒன்றிய அரசு முடிவு செய்கிறது. இதுவும் தனியார் நிறுவனங்களின் வணிக வெறிக்காக காடுகளை இரையாக்கும் நடவடிக்கைதான். இந்தியாவின் முதன்மை பணக்காரரான அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம் இந்தியாவில் 2019 முதல் சில தனியார் வன உயிரியல் பூங்காக்களை அமைக்கத் தொடங்கியுள்ளதும், 2020ஆம் ஆண்டு ஒன்றிய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையானது நாட்டிலுள்ள 160 வன உயிரியல் பூங்காக்களை மேம்படுத்துவதற்கு தனியாருடன் சேர்ந்து ஒப்பந்தமிட முடிவு செய்ததையும் நாம் இங்கு தொடர்புபடுத்த வேண்டியுள்ளது. எனவே இச்சட்டத்திருத்தம் மூலம் காடுகளின் இயல்பை பாதிக்கக்கூடிய வன உயிரியல் பூங்காக்கள், வன உலாக்கள் போன்றவற்றைத் தனியாருக்குத் தாரை வார்க்க அரசு திட்டமிட்டுள்ளது. இந்த அடிப்படையில்தான் ஆனந்த் அம்பானியின் 3000 அக்கர் தனியார் உயிரியல் பூங்கா 26.02.24 அன்று குஜராத் மாநிலம் ஜாம் நகரில் துவங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையானது 2021 தொடங்கி அடுத்த பத்தாண்டுகளை காலநிலை மாற்றத்தின்தாக்கத்திலிருந்து நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள மேற்கொள்ள வேண்டிய அத்தனை மாற்றங்களையும் செய்வதற்கான பத்தாண்டாக அறிவித்துள்ளது. ஆனால் 2021 கிளாஸ்கோ மாநாட்டில் உலகின் சராசரி வெப்பநிலையை 1.5 டிகிரி செல்சியஸ் அளவிற்கு உயராமல் தடுப்பதற்காக காடுகள் அழிப்பை 2030ஆம் ஆண்டிற்குள் நிறுத்துவதற்கான உடன்பாடு ஒன்றில் 141 நாடுகள் இணைந்து கையெழுத்திட்டன. இந்த உடன்பாட்டை இந்திய அரசு ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# 3. காற்று மாசுபாடு




| 2023 - ANNUAL AVERAGE PM2.5 | | |
|---|---|---|
| 1 | BANGLADESH | 79.9 |
| 2 | PAKISTAN | 73.7 |
| 3 | INDIA | 54.4 |
| 4 | TAJIKISTAN | 49.0 |
| 5 | BURKINA FASO | 46.6 |

**Source: 2023 World Air Quality Report**

அதிகமாக காற்று மாசடைந்துள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா மூன்றாமிடத்தில் இருப்பதாக IQAIR அமைப்பு4 வெளியிட்ட World Air Quality Report 2023 கூறுகிறது. இந்தியாவில் ஆண்டுதோறும் காற்று மாசினால் மட்டும் சுமார் 22 லட்சம் மக்கள் உயிரிழக்கின்றனர். 2023ம் ஆண்டு 134 நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்தியாவிற்கு மிகவும் காற்று மாசடைந்துள்ள நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடம் வழங்கப்பட்டுள்ளது. உலகெங்கும் தீவிரமாக காற்று மாசடைந்துள்ள 50 நகரங்களில் 42 இந்திய நகரங்கள் இருப்பதாக இவ்வாய்வு கூறுகிறது.

வட இந்தியாவில் குறிப்பாக உத்தரபிரதேசம், பிகார் போன்ற மாநிலங்களில் மாசடைந்த காற்றை சுவாசிப்பதால்




மக்கள் தங்கள் வாழ்நாளில் 8 ஆண்டுகளை இழப்பதாகவும், தலைநகர் டெல்லியில் வசிக்கும் மக்கள் தங்கள் வாழ்நாளில் 12 ஆண்டுகளை இழப்பதாகவும் AQLI ஆய்வறிக்கை5 கூறுகிறது.

காற்று மாசுபாடிற்கு இந்தியாவில் நுண்துகள் பெருக்கம் நாளுக்கு நாள் அதிகமாகி வருவது ஒரு முக்கியக் காரணம். இந்தியாவில் வருடாந்திர சராசரி PM2.5 நுண்துகளின் அளவு 54.4 mg/ m3 ஆக உள்ளது. இது உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்துள்ள அளவுகளை விட பத்து மடங்கு அதிகமாகும்.

நுண்துகள் அளவுகளில் பிகாரின் பெகுசாரை 119 mg/m3 உடன் முதல் இடத்தில் உள்ளது, இது உலக சுகாதார நிறுவனம்

நிர்ணயித்துள்ள அளவுகளைவிட24 மடங்கு அதிகமாகவும். அதே போல் அசாம் மாநிலம் கவுகாத்தி இரண்டாம் இடத்திலும் (105.4 mg/m3), தலைநகர் டெல்லி மூன்றாம் இடத்திலும் (92.7 mg/m3) உள்ளது. தீவிரமாக காற்று மாசடைந்துள்ள தலைநகரங்களில் டெல்லி முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அனைவருக்கும் நீல வானம் மற்றும் தூய காற்றினை உறுதி செய்வோம் என்று தேர்தல் வாக்குறுதி கூறிதான்6 பா.ஜ.க. தேர்தல்களைச் சந்தித்தது.2019ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு இந்தியாவில்24 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 131 நகரங்களில் காற்றின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2019 ஆம் ஆண்டில், மோடி அரசாங்கம் தேசிய மாசற்ற காற்று திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

ஆனால், 2019 முதல் 2022 வரையிலான தரவுகளை ஒப்பிடுகையில் வெறும்14 நகரங்களில்தான் காற்றின் தரம் 10% மேல் நல்ல நிலைக்கு உயர்ந்துள்ளது என தெரியவந்துள்ளது. இந்த 131 நகரங்களில் 69 நகரங்களில் மட்டுமே நிகழ் நேர காற்று தர கண்காணிப்பு நிலையங்கள் (Real Time Ambient Air Quality Monitoring Stations) அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# 4. ஆபத்தில் இமயமலை



கங்கை, யமுனை, பிரம்மபுத்ரா போன்ற நதிகளின் பிறப்பிடமாக இருக்கும் இமயமலையின் பனிப்பாறைகள் 60 கோடி இந்தியர்களுக்கு நீராதாரமாக இருகின்றது. லடாக், ஜம்மு காஷ்மீர், இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம், அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, மேகாலயா, அஸ்ஸாம் (டார்ஜலிங்), மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளை உள்ளடக்கியது இந்திய இமயமலைப் பகுதி. சுமார் 5.3 லட்சம் சதூர கிலோமீட்டர் பரபளவு கொண்ட இந்திய இமயமலைப் பகுதியில் 41.5% நிலப்பரப்பு காடுகள் ஆகும்.

இந்த இந்திய இமயமலைப் பகுதி சூழலியல் ரீதியாகவும், புவியியல் ரீதியாகவும் மிக முக்கியமான பகுதி ஆகும். ஆனால், இதனை சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த இமயமலைப் பகுதியைதான் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் என்ற பெயரில் நெடுஞ்சாலைத் திட்டங்களையும், நீரின் போக்கை மாற்றியமைக்கக் கூடிய பெரிய புனல் மின் திட்டங்களையும், சுரங்கப் பணிகளையும் தொடர்ந்து முன்னெடுத்து இமயமலையின் இயற்கைச் சூழலை அழித்து வருகிறது பா.ஜ.க அரசாங்கம்.

சார் தாம் திட்டம் (Char Dham Project) என்ற பெயரில் தன்னுடைய கனவு திட்டதை உத்திராக்காண்ட் மாநிலத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறார் பிரதமர் மோடி. பத்ரிநாத்,

கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகிய வழிபாட்டுத் தலங்களை இணைக்கும் விதமாக ஏற்கனவே இமயமலையில் உள்ள சாலைகளை விரிவுபடுத்தி இமயமலையில் 900 கி.மீ.க்கான நெடுஞ்சாலைகள் அமைப்பதே இத்திட்டம்10. இமயமலையில் அதிகபட்சம் 5.5 மீட்டர் அகலத்திற்குதான் சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற விதி இதுவரை பின்பற்றப்பட்டு வந்த நிலையில் தற்போது 10 மீட்டர் அகலத்திற்கு இந்தச் சாலைகள் அமைக்கப்பட உள்ளன. இந்த சார் தாம் திட்டம்11 மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டால் சுமார் 508.66 எக்டர் இமயமலைக் காடுகள் அழிக்கப்படும். இது அப்பகுதியின் உயிர்ப்பன்மையதிற்கே பெரிய ஆபத்தாகக்கூடும் என அரசுத்துறை வல்லுனர்களே எச்சரித்துள்ள போதும் திட்டப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்கிறது பா.ஜ.க அரசு.

ஏற்கனவே இமயமலையில் உள்ள சுனைகள் வேகமாக வற்றி வருகின்றன 2018 Niti Ayog அறிக்கையின்படி 50% இமயமலை சுனைகள் வேகமாக அழியும் தருவாயில் உள்ளன. உத்தரகாண்டில் உள்ள 50% கிராமங்கள் ஏற்கனவே அதன் பாரம்பரிய நீர் ஆதாரங்களை இழந்துவிட்டது12. அதில் 734 கிராமங்கள் வாழத் தகுதியற்ற கிராமங்களாக மாறியுள்ளது எனவும் 565 கிராமங்களில் 50% மக்கள் மட்டுமே வசிகின்றனர் என்று உத்தரகாண்ட் அரசின் தரவில் இருந்து தெரிகிறது. இந்த தரவுகள் அப்பகுதியில் உள்ள நீர் ஆதாரம் வேகமாக வறண்டு போவதால் நடக்கும் அதிகப்படியான மக்கள் இடப்பெயர்வையே நமக்கு உணர்த்துகிறது. இந்தச் சூழலில்தான் சுனைகள் சுரக்கும் காடுகளை அழித்து, நீர் வழிப் பாதைகளை அழித்து சமய வழிபாட்டு தலங்களுக்கான பிரம்மாண்ட சாலைகள் அமைக்கத் துடிக்கிறது பா.ஜ.க அரசு.


ஏற்கனவே சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பதனாலும் சுற்றுலாவிற்குத் தேவையான கட்டுமானங்கள் பெருகுவதாலும் இமயமலைப் பகுதி கடுமையான

அழுத்தத்தில் இருக்கிறது. மேலும் நவீன சாலைகள் அமைத்து சுற்றுலாவை பெருக்குவது என்பது நிச்சயம் இமயமலையின் இயற்கைச் சூழலுக்கு அழிவையேக் கொண்டு வரும்.

அதே போல் பா.ஜ.க. அரசு இமயமலைப் பகுதிகளில் நிறைவேற்றத் துடிக்கும் நீரின் போக்கினை மாற்றி அமைக்கும் பெரிய புனல் மின் திட்டங்களும், சுரங்கப் பணிகளும் அப்பகுதிக்கு நிலச்சரிவு, நில அதிர்வு, பனிபாறை வெடிப்பு, உறைபனி ஏரிகள் வெடிப்பு என பல அபாயங்களை ஏற்படுத்துகிறது. மண்ணுக்குள் புதைந்துக் கொண்டிருக்கும் ஜோஷிமத் நகரமே இதற்குப் பெரிய உதாரணம். 2023, ஜனவரி மாதம் மட்டும் ஜோஷிமத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் திடீர் நிலச்சரிவில் சேதமடைந்தன. நிலம் திடீரென உள் வாங்கியதற்கு அப்பகுதியில் டபோவான் புனல் மின் திட்டதிற்காக தோண்டப் பட்ட 12 கிமீ சுரங்க பணிகள்தான் கரணம் என வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள்.

இவ்வளவு பாதிப்புகள் நடந்தும் பா.ஜ.க. அரசு புனல் மின்திட்டங்களையும், வெடி வைத்து தகர்த்தி சுரங்கம் தோண்டும் பணிகளையும் இமயமலை எங்கும் நடத்திக் கொண்டுதான் இருக்கிறது. இதேபோல் Z Morh & Zojila tunnel Project என்ற பெயரில் லடாக்கையும் ஜம்மு வையும் இணைக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன. அருணாச்சலப் பிரதேசத்தில் அமையவுள்ள செலா சுரங்கப்பாதை, மற்றும் எல்லைகளில் ஆயுதங்களையும் ராணுவத்தினருக்கான போக்குவரத்துகளையும் அதிகரிக்க அட்டல் சுரங்கப்பாதை ஏற்படுத்தப்பட்டது. இதனால் ஏற்பட்ட சூழலியல் பாதிப்புகள் ஏராளம். சிக்கிம் மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சிக்கிம் உர்ஜா எனும் புனல் மின்திட்டத்தினால் சமீபத்தில் மிகப் பெரிய வெள்ளத்தையும் பொருட்சேதத்தையும் சிக்கிம் சந்தித்தது. அதேபோல் உத்தரகாண்டின் அலக்னந்தா மற்றும் பகிரதி நதிகளில்

நடைமுறைப் படுத்தப்பட்ட புனல் மின்திட்டங்களினால் நீரின்போக்கு 80% வரை மாற்றி அமைக்கப்பட்டதன் விளைவாக நதியின் கீழ் பகுதிகளில் நீரோட்டம் குறைந்து, நதியின் உயிர்ப்பன்மையம் பாதித்து மீன்கள் இடப்பெயர்விற்குக் காரணமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.




Source: Down to Earth

**உத்தரக்கண்டில் புதிதாக வர இருக்கும் புனல் மின் திட்டங்கள்:**

| | |
|---|---|
| Tehri Stage 2 | 1000 MW |
| Tapovan Vishnugadh | 530 MW |
| Vishnugadh Pipalkoti | 444 MW |
| Singoli Bhatwari | 99 MW |
| Phata Bhuyang | 76 MW |
| Madhyamaheshwar | 15 MW |
| Kaliganga | 6 MW |

இந்த ஏழு திட்டங்களுடன் சேர்த்து இந்திய இமயமலைப் பகுதிகளில் மொத்தம் 26 புனல் மின்திட்டங்களுக்கான கட்டுமான பணிகள் நடந்து வருகிறது. இன்னும் 320 பெரிய திட்டங்கள் திட்ட வடிவில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 10 ஆண்டுகளாக முக்கியத்துவம் வாய்ந்த இமயமலைப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரில் பா.ஜ.க. அரசு மிகப்பெரிய சூழலியல் வன்முறை செய்து வருவதோடு,அங்கு அதிகரித்து வரும் பேரிடர்களைக் குறைக்க தகவைமைக்க ஒதுக்கப்படும் நிதியினையும் வெகுவாகக் குறைத்துள்ளது.



# 5. நீர்த்துப் போகும் சுற்றுச்சூழல் கொள்கைகள்/ சட்டங்கள்

கடந்த பத்து ஆண்டுகளாக, பல்வேறு வகையான திட்டங்களுக்கு சுற்றுச்சூழல், நீர், காற்று, காட்டுயிர், காடு, கடலோர அனுமதியளிக்கும் நடைமுறையானது, பெரு நிறுவனங்களுக்குச் சாதகமாக எளிதாகத் தொழில் புரியும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருவது பெரும் அபாயத்தை உருவாக்கியுள்ளது. சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் மீதானத் தாக்குதல் என்றுதான் இதனைக் கூற வேண்டும்.

- 2011 முதல் 2020 வரை இந்தியாவின் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் சுமார் 300 முறை திருத்தப்பட்டுள்ளன.
- வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை சட்ட வரைவு முற்றிலும் பெரு நிறுவனங்களுக்குச் சாதகமாக திட்டங்களுக்கு அனுமதி அளிக்கவும் சில அனுமதிகள் பெறுவதிலிருந்து விலக்களிக்கவும் முன்மொழியப்பட்டது.
- புதிய வரைவு அறிவிக்கை மீது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஆனால், தற்போது நடைமுறையில் உள்ள அறிவிக்கை 33 முறை திருத்தப்பட்டுள்ளது.

இந்த வரைவில், திட்டங்களுக்கு முன் மற்றும் பிறகான சுற்றுச்சூழல் அனுமதியைப் பெறுவதற்கான செயல்முறையை வரையறுத்தல், எண்ணற்ற பிரிவுகளில்

கீழ் வரும் திட்டங்களுக்கான பொதுமக்கள் கருத்துக் கேட்பினை தவிர்த்தல் மற்றும் நிபுணர் மதிப்பீட்டுக் குழுவின் (EAC) செயல்பாட்டில் ஒன்றிய அரசின் மேற்பார்வையை அதிகரித்தல் போன்ற மோசமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்தியாவின் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்ட முக்கியமான மூன்று சட்டங்களான சுற்றுச்சூழல்(பாதுகாப்பு) சட்டம் 1986, ( நீர் மற்றும்கட்டுப்பாடு) சட்டம், 1974, காற்று(மாசுபாடு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 ஆகிய திருத்தங்கள் மேற்கொள்ள ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சகம் முடிவெடுத்துள்ளது. மேலும் காட்டின் மீது பழங்குடி மக்களுக்கு இருக்கும் உரிமையைப் பறிக்கும் வகையில் காடு பாதுகாப்பு விதிகள்2022ஐயும் ஒன்றிய அரசு அரசிதழில் வெளியிட்டுள்ளது. இச்சட்டத்திருத்தங்களுமு, விதிகளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு எதிரானதாக அமைந்துள்ளது.

நீர்த்துப் போகும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு 2020 (EIA 2020)

முந்தைய அறிவிக்கையில் சூழலியல் தாக்க மதிப்பீடும், பொதுமக்கள் கருத்துக் கேட்பும் அவசியமாக இருந்த 25 சிவப்பு மற்றும் ஆரஞ்சு வகை நிறுவனங்களைத் தற்பொழுது B2 பிரிவுக்கு மாற்றியிருப்பதன் மூலம் அத்தொழில்களைத் தொடங்குவதற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்போ, சூழலியல் தாக்க மதிப்பீடோ செய்ய வேண்டியதில்லை என்கிறது இந்த புதிய வரைவு.

இந்த புதிய வரையறையின் படி B2 பிரிவில் குறிப்பிடபட்டிருக்கும் கனிமசுரங்கப் பணிகள் (5 ஹெக்டேர்கள் வரை), 100KM வரையிலான சாலை விரிவாக்க பணிகள், உள்நாட்டு நீர் வழிகள், நீர்ப்பாசன நவீனமயமாக்கல் (Modernization), அனைத்துக் கட்டுமானம்

மற்றும் நகரியத் திட்டங்கள் (Township projects), அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள், சிமெண்ட் ஆலைகள்,25MW அளவிலான புனல் மின்சாரத் திட்டங்கள், தொழிற்பேட்டைகளில் (Industrial Estates) இயங்கும் தோல் தொழிற்சாலைகள் மற்றும் முக்கியமாக நீருக்கடியிலும் பூமிக்கடியிலும் இருக்கும் எரிவாயு-நிலக்கரி-எண்ணை வளங்கள்-நிலக்கரி படிம மீதேன் எடுத்தல் (off shore and onshore oil & gas including Coal bed methane and shale gas exploration) ஆகிய திட்டங்களுக்கு EIA வும் கருத்துகேட்பும் அவசியமில்லை (அட்டவணை பக்கம் 123).

தமிழ்நாட்டு மக்களுக்குப் புரியும்படி சொல்ல வேண்டுமென்றால் கடலூரில் இருந்து ராமநாதபுரம் வரை காவிரிப் படுகையில் நிலத்தடியிலும் நீருக்கடியிலும் இவர்கள் போடப் போகும் ஆயிரக்கணக்கான ஹைட்ரோகார்பன் கிணறுகளுக்கான அனுமதியைப் பெறுவதற்கு, பொது மக்கள் கருத்துக்கேட்போ, சூழலியல் தாக்க மதிப்பீடோத் தேவையில்லை.

விலக்களிக்கப்பட்ட ஆபத்தான திட்டங்கள்:

நிலத்தடியிலிருந்து எடுக்கப்படும் ஹைட்ரோகார்பனை சுத்திகரிக்கும் தொழிற்சாலையையும்(development production and transportation of gas including shale gas and Coal bed methane), எண்ணை வளங்களை சுத்திகரிக்கும் பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலையையும்விட (Petroleum refining industries) அதை நிலத்தடியில் இருந்து எடுக்கும் (exploration) நீரியல் விரிசல் (Fracking) முறையே மிகவும் ஆபத்தானது. எடுக்கப்படும் எரிவாயு மற்றும் எண்ணை வளங்களைச் சுத்திகரிக்கும் நிறுவனங்களைத் துவங்க சூழலியல் தாக்க மதிப்பீடும், பொதுமக்கள் கருத்துக் கேட்பும் அவசியம் என்று சொல்லி A பிரிவில் வைத்துவிட்டு, மிகவும் ஆபத்தான பூமிக்கடியில் இருந்து எரிவாயு-நிலக்கரி-எண்ணை வளங்கள்-நிலக்கரிப் படுகை மீத்தேன் எடுப்பதற்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு & மக்கள் கருத்துகேட்பு தேவை

இல்லை என்று B2 பிரிவில் சேர்த்திருப்பது முரண்பாட்டின் உச்சம்.

முக்கியமாக தேச நலன், பாதுகாப்புச் சார்ந்த திட்டங்கள் (projects concerning national defense and security or involving other strategic considerations) மற்றும் கடலில் 12 நாட்டிகல் மைல் தொலைவில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஆகியவற்றை மக்களுக்குத் தெரியப்படுத்தவோ, பொதுமக்கள் கருத்துக் கேட்போச் தேவையில்லை என்றும் சொல்கிறது புதிய வரைவு. இந்த வரையறையின் கீழ், கடல்வளத்தை அழிக்கும் சாகர்மாலா திட்டமும், நாட்டின் லட்சிய திட்டமாக பா.ஜ.க அரசால் கருதப்படும் பாரத்மாலா பரியோஜனா திட்டத்தின் கீழ் வரும் எட்டு வழிச்சாலை திட்டமும், தமிழ்நாட்டை இராணுவ கேந்திரமாக்கும் திட்டமும், ஏன் நம் மலை வளத்தை நாசமாக்கத் துடிக்கும் நியூட்ரினோத் திட்டமும் கூட இதன் அடிப்படையில் மக்கள் கருத்துக்கேட்பு இல்லாமல் நடைமுறைப் படுத்தப்பட்ட வாய்ப்பிருக்கிறது.

இதே போன்று இந்திய எல்லைப் பகுதிகளில் இருந்து 100km வான் தூரம் (aerial distance) வரையிலான நிலப்பகுதிகளில் வர இருக்கும் தேசிய நெடுஞ்சாலை, குழாய் பதிப்புத் திட்டங்களுக்கு கருத்துக் கேட்புத் தேவையில்லை என்று புதிய EIA வரைவில் பத்தி 14.2 இல் குறிப்பிட்டிருப்பது, குறிப்பாக வட கிழக்கு மாநிலங்களில் வாழும் மக்களுக்கு அவர்களின் இயற்கை வளங்ளையும் வாழ்வாதாரத்தையும் கடுமையாக அச்சுறுத்தும் ஒன்றாகப் பார்க்கவேண்டியிருக்கிறது.

அதேபோல் பெரிய அளவிலான சூரிய ஆற்றலில் மின்சாரம் உற்பத்தி செய்யும் சோலார் பூங்காத் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிலிருந்தும் மக்கள் கருத்துக்கேட்பில் இருந்து விலக்களித்திருக்கிறது புதிய வரைவு (பத்தி 26.14). புதுப்பிக்கத்தக்க மின்சாரமாக இருப்பினும் மையப்படுத்தப்படாத மின்சக்தியே வேண்டுமென்று சூழலியலாளர்கள் கோரிக்கை

வைத்துக்கொண்டிருக்கும் நிலையில் இது போன்ற பெரியளவிலான சூரிய மின்சாரத் திட்டங்களுக்கு அதிகப்படியான விவசாய நிலங்களே கையகப்படுத்தப்படும்.

ராமநாதபுரத்தில் அதானியின் 4500கோடி ரூபாய் சூரிய ஆற்றல் மின்சார உற்பத்தி திட்டத்திற்காக விவசாய நிலங்கள் கையகப்படுத்துவதை எதிர்த்து அப்பகுதி விவசாயிகள் போராடி வருவது இங்கே குறிப்பிடத்தக்கது.

**Draft EIA 2020யில் இருக்கும் மற்ற முக்கிய பிரச்சனைகள்:**

1. நீர்த்துப் போகும் பொதுமக்கள் கருத்துகேட்பு நடைமுறை:
2. வலுவிழக்கும் கண்காணிப்பு நடைமுறைகள்
3. சுற்றுச்சூழல் அனுமதி உரிமத்தின் கால அவகாசத்தை கூட்டுதல்:
4. திட்ட செயல்பாட்டிற்கு பிந்தைய சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் முறை (Post Facto Clearance)

தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) அரசாங்கத்தின் முதல் நான்கு ஆண்டுகளில், 520 திட்டங்களுக்கு வளர்ச்சி திட்டங்கள் என்ற பெயரில் சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டன. இதில் தொழிற்பேட்டைகள், கட்டிடங்கள், சாலைகள், நெடுஞ்சாலைகள் மற்றும் கடற்கரை பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களும் அடங்கும். 2018 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில், காட்டுயிர் அனுமதி, வனத்துறை அனுமதி, சுற்றுச்சூழல் மற்றும் கடலோர மண்டலங்களுக்கான அனுமதிகள் 2,000% க்கும் அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது, (577 இலிருந்து 12,496 ஆக உயர்ந்துள்ளது).

# 6.சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நீர், காற்று மாசுபாடு தடுப்புச் சட்டங்கள்



சுற்றுச்சூழல்(பாதுகாப்பு) சட்டம்1986, நீர்(மாசுபாடு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, காற்று(மாசுபாடு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்,1981 ஆகிய மூன்று சட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் குறித்து 01.07.2022, 30.06.2022, ஆகிய தேதிகளில் அறிவிப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்த திருத்தங்கள் குறித்து கருத்து தெரிவிக்க விரும்புபவர்கள் 21.07.2022க்குள் மின்னஞ்சல் வாயிலாக கருத்து தெரிவிக்கலாம் என ஒன்றிய அரசு தெரிவித்தது.

இத்திருத்தங்களில் சில குற்றங்கள் மற்றும் விதிமீறல் களுக்கான அபராதத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. குறிப்பாக விதிகளை மீறுவோர்க்கு ஒரு லட்சம் வரை அபராதமும் மீதிமீறல் தொடரும் பட்சத்தில் ஒவ்வொரு நாளுக்கும் ரூ 5 ஆயிரம் ரூபாயும் அபராதம் என்பதை மாற்றி விதிமீறலுக்கு ரூ. 5 லட்சம் முதல் ரூ 50 கோடி வரையிலும் என்றும் விதிமீறல் தொடரும் பட்சத்தில் ஒவ்வொரு நாளுக்கும் ரூ. 50 ஆயிரம் முதல் ரூ.5 லட்சம் வரை அபராதம் செலுத்தும் வகையில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் விதிமீறல் குற்றங்களுக்குத் தற்போது நடைமுறையில் உள்ள சிறைத்தண்டனையானது நீக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக சுற்றுச்சூழல்(பாதுகாப்பு) சட்டம் 1986ன் விதிகளை மீறுவோர்க்கு பிரிவு 15ன் கீழ் 5 ஆண்டுகள்

வரையிலான சிறைத்தண்டனையும்,1 லட்சம் ரூபாய் வரை அபராதமும் அல்லது இவ்விரு தண்டனைகளையுமே விதிக்க முடியும். இந்தப் பிரிவில் மாற்றம் செய்து சிறைத்தண்டனை என்பது நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் சுற்றுச்சூழல் குற்றங்களுக்கு ஏதாவது பெரிய நிறுவனங்கள் சிறைத் தண்டனை பெறுகிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. விதிமீறலுக்கு சிறைத்தண்டனை விதிக்கலாம் என்கிற சட்டப்பிரிவு இருக்கும்போதே இதுதான் நிலைமை. வேதாந்தா போன்று சுற்றுச்சூழல் விதிகளை மீறும் நிறுவனங்கள் எத்தனை கோடி அபராதமாக செலுத்தியும்கூட தங்கள் சூழல் விரோத செயல்பாடுகளைத் தொடர தயாராகவே இருக்கின்றனர். இப்படி ஒரு நிலையில் சிறைத்தண்டனை என்கிற பிரிவை சட்டத்தில் இருந்து நீக்குவதும் சூழல் விரோதக் குற்றங்களில் ஈடுபடும் பணம் கொழித்த நிறுவனங்களுக்கு லைசென்ஸ் வழங்கியது போலாகிவிடும்.

இதேபோல ஒரு திருத்தத்தை உயிரினப் பன்மையச் சட்டத்திலும் கொண்டு வந்தது ஒன்றிய அரசு. அச்சட்டத்தின் பிரிவு 3, 4 மற்றும் 6ஐ மீறினால் ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனையோ அல்லது 10 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். மேலும் அத்தவறினால் ஏற்பட்ட சேதம் 10 லட்ச ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் இந்த அபராதம் அதற்கு தக்கவாறும் அல்லது இவ்விரண்டு தண்டனைகளுமே சேர்ந்து விதிக்கப்படும். பிரிவு 7ன் கீழான விதிமுறைகள் அல்லது பிரிவு 24 உட்பிரிவு (2)ன் கீழான விதிமுறைகளை மீறினால் மூன்று வருட காலம் வரையிலான சிறைத்தண்டனை அல்லது ஐந்து லட்சம் அளவிலான அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படும் என்றிருந்தது. தற்போது இந்த தண்டனை பிரிவில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தின்படி சிறைத்தண்டனை முற்றிலுமாக

நீக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் விதிமீறல் குற்றங்களுக்கான தண்டனைகளில் சிறைத் தண்டனையை நீக்குவது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

மேலும், இப்புதிய சட்டத் திருத்தத்தின் மூலம் காற்று மற்றும் நீர் மாசுபாடு தடுப்புப் பகுதிகளில் மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்கள் ஒரு ஆலையோ, நிறுவனமோ செயல்படுவதற்கு தேவைப்படும் இசைவாணையை வழங்கவோ, மறுக்கவோ, ரத்து செய்யவோ எந்த நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்கிற வழிகாட்டுதல்களை ஒன்றிய அரசே உருவாக்கும். இது மாநில அரசின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதாகும். தனது மாநில எல்லைக்குள் தொடங்கப்படும் அல்லது இயங்கி வரும் ஒரு ஆலையை இசைவாணைகள் மூலம் எப்படி கண்காணிக்கலாம் என்பதை மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்கள் தான் முடிவு செய்ய வேண்டும் என்பதால் இந்தத் திருத்தமும் கடும் கண்டனத்திற்குரியதாகும்.

# 7.பழங்குடிகளின் உரிமையைப் பறிக்கும் காடு பாதுகாப்பு விதிகள்



**பா.**ஜ.க. அரசு கொண்டு வந்த காடு பாதுகாப்பு விதிகள் 2022 (Forest Conservation Rules), காடுகளில் வசிக்கும் மக்களிடம் கலந்தாலோசிக்காமலே காடுகளை அழிப்பதற்கான உரிமையை ஒன்றிய அரசிற்கு வழங்கியுள்ளது. முன்னதாக காடுகளை, காடு மற்றும் காட்டுயிர் பாதுகாப்பு அல்லாத வேறு திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டிய சூழல் உருவானால் Forest Conservation Act 1980ன் கீழ் இரண்டு கட்டங்களாக முன் அனுமதி பெற வேண்டும். முதல் நிலை அனுமதி பெறுவதற்கு முன்பாகவே திட்ட அமைவிடத்தில் வாழும் பழங்குடிகள் மற்றும் காட்டை நம்பி வசிக்கும் மக்களிடம் ஒப்புதல் பெறுவதும் அந்த ஒப்புதலை சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டதா என்பதை ஆராயும் பொறுப்பும் ஒன்றிய அரசுக்கு இருந்தது. தற்போது அப்பொறுப்பில் இருந்து ஒன்றிய அரசு விலகியுள்ளது. இப்புதிய விதிகள், 2006ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட வன உரிமைச் சட்டத்திற்கு முற்றிலும் எதிரானதாகும். வன உரிமைச் சட்டத்தின்படி காடு அல்லது காட்டுயிர் பாதுகாப்பு அல்லாத ஒரு திட்டத்திற்காக காட்டுப் பகுதியை பயன்படுத்த பழங்குடிகள் மற்றும் காட்டை நம்பி வசிக்கும் மக்களின் ஒப்புதல் அவசியம் என்பதை பல்வேறு வழக்குகளின் தீர்ப்புகளில் உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் உறுதிபடுத்தியுள்ளன.

கடந்த காலங்களிலும் இதுபோல் வன உரிமைச் சட்டத்தை நீர்த்துபோகச் செய்ய பல்வேறு முயற்சிகள் நடந்தபோது ஒன்றிய பழங்குடிகள் அமைச்சகமே இதுபோன்ற முயற்சிகள் அனைத்தும் பழங்குடிகள் நலனுக்குத் தீங்காக அமையும் என எச்சரித்திருந்தது. பழங்குடியினர் தங்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள வழிசெய்யும் இச்சட்டத்தை நீர்த்துப்போகச் செய்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு

# 8. CRZ கடலோர மண்டல மேலாண்மை விதிகளை நீர்த்துப் போகச் செய்த பா.ஜ.க. அரசு



கடல் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு Coastal Regulatory Zone Notification 2011ன் கீழ் உரிய முன் அனுமதி பெறுவது அவசியமாகும். இதன் மூலம் கடற்கரையை ஒட்டிய மணல்மேடுகள், நதிகள், முகத்துவாரங்கள், கழிமுகங்கள், ஊற்றுகள், அலையாத்திக் காடுகள் போன்றவற்றின் உயிர்ப்பன்மையம் பாதுகாக்கப்படுகிறது.

2011 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்(CRZ) அறிவிப்பின் மூலம் நிறுவப்பட்ட பாதுகாப்புகளை பலவீனப்படுத்தும் விதமாக, கடற்கரைப் பகுதிகளில் பெரிய அளவிலான வணிகத் திட்டங்களுக்கான அனுமதியை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகள் நடக்கின்றன.

உதாரணத்திற்கு திருத்தப்பட்ட CRZ அறிவிக்கையானது, CRZ 2011 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கடலோரப் பகுதிகள் மற்றும் ஆறுகளில் 'வளர்ச்சி இல்லாத மண்டலத்தை' 200 மீட்டரிலிருந்து வெறும் 50 மீட்டராகக் குறைத்துள்ளது. சுற்றுச்சூழல் உணர்திறன் கொண்ட கடலோரப் பகுதிகளில் யுரேனியம் போன்ற முக்கியமான அணு கனிமங்களை எடுக்க இது அனுமதிக்கிறது.

திருத்தப்பட்ட அறிவிக்கை மீது மீனவர்கள் மற்றும் கடலோர சமூகங்களிடமிருந்து போதுமான கருத்துகள் கேட்கப்படவில்லை என்ற குற்றசாட்டும் முன்வைக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக

இந்தியாவில் உள்ள சட்டங்களில் அதிக முறை மீறப்பட்ட சட்டம் CRZ 2011ஆகத்தான் இருக்கும். பொதுமக்கள் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போன்றவர்களின் கண்காணிப்புக்கு அப்பாற்பட்ட பல கடற்கரை இடங்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் CRZ விதிகளை மீறியே செயல்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் பல்வேறு திட்டங்கள் CRZ அனுமதி இல்லாமல் தொடரப்பட்டு CRZ அனுமதி பெற முடியாமல் இப்போது கிடப்பில் போடப்பட்டுள்ளது.. தற்போது உரிய அனுமதி பெறாமல் மேற்கொள்ளப்படும் திட்டங்களால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பிற்கான இழப்பீட்டை செலுத்தி விட்டு திட்டத்திற்கான CRZ அனுமதியை பெற்றுக்கொள்ளலாம் என ஒன்றிய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்திய மற்றும் தமிழகக் கடற்கரை ஏற்கனவே பல சுற்றுச்சூழல் விதிமீறல்களாலும், இயற்கைப் பேரிடர்களாலும், கடல் அரிப்பாலும், கடல் நீர் உட்புகுவதாலும் பேராபத்தை சந்தித்து வருகின்றது. இந்த நிலையில் விதிமீறல் திட்டங்களையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகளை மீறுபவர்களையும் தொடர்ந்து ஊக்குவிக்க ஏற்கனவே இருக்கின்ற சட்டங்களை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டு செயலாற்றி வருவது கண்டனத்திற்குரியது.

# 9. உயிரினப் பன்மையச் சட்டத் திருத்தம் 2023




இந்தியாவின் உயிரினப் பன்மயத்தைப் பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட Biological Diversity Act,2002ல் இந்தியாவின் உயிர்ப் பன்மய வளங்களான காடுகளில் உள்ள தாவரங்கள்,விலங்குகள்,நுண்ணுயிர்கள் அவற்றின் மரபணு வளங்கள் மற்றும் இயல்பான வழித்தோன்றல்கள் மற்றும் அவற்றின் திறன் குறித்த மரபு சார்ந்த அறிவு போன்றவற்றை பாதுகாக்க இயற்றப்பட்டது. உயிரியல் வளங்களைப் பாதுகாத்தல், அவற்றை வளங்குன்றா வகையில் பயன்படுத்துதல், அத்தகைய உயிரியல் வளங்களின் பயன்பாட்டினால் கிடைக்கும் பலன்களை நியாயமாகவும், சமமாகவும் பகிர்ந்து கொள்வதை உறுதிசெய்தல் என்பதுதான் இச்சட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

குறிப்பாக, நமது மரபு அறிவாண்மை(Traditional Knowledge), அறிவுசார் சொத்துரிமை சட்டத்தின் (Intellectual Property) மூலம் திருடுபோவதைத் தடுக்கவும் இச்சட்டம் உதவிவந்தது. இச்சட்டத்தின் முக்கிய நோக்கமே இந்தியாவின் உயிர்ப்பன்மய வளங்களைப் பாதுகாப்பதுதான். ஆனால், தற்போது கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் அனைத்தும் இவ்வளங்களை பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் எளிதாகவும் எவ்வித முன் அனுமதியும் பெறாமல் சுரண்டுவதற்காக வழி செய்கிறது. திருத்த சட்டமானது நெறிமுறைப்படுத்தப்பட்ட மரபார்ந்த அறிவைப் பயன்படுத்தினால் அதனால் கிடைக்கும்

பலனை பங்கிட்டுக் கொள்ள அவசியமில்லை என்கிறது. இது Bio Piracy க்கு வழிவகுக்கும்படியாக உள்ளது. மேலும் ஒரு மரபு சார்ந்த அறிவை நெறிமுறைப்படுத்தியிருந்தாலும் நெறிமுறைப்படுத்தாவிட்டாலும் அதனால் கிடைக்கும் பலனை நியாயமான முறையில் பங்கிட்டுக் கொள்வதுதான் சரி. இந்த திருத்தமானது ஏற்கெனவே மஞ்சள், வேம்பு உள்ளிட்டவற்றின் மீது நம் நாட்டிற்கு உள்ள காப்புரிமையை நிலை நாட்டும் சட்டப் போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்து விடும்.

இச்சட்டத்தின் விதிகளை மீறுவோருக்கு அபராதம் மற்றும் சிறைத் தண்டனை வழங்கும் சரத்துகளில் தற்போது திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. தண்டனை பிரிவில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தின்படி சிறைத்தண்டனை முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய மோசடியாகும். குறிப்பாக ஆயுஷ் துறையில் பெரிய அளவிலான முதலீடுகளுடன் வணிகம் நடைபெற்று வருகிறது. அவர்கள் இந்தச் சட்டத்தின் பல்வேறு விதிகளை மீறுகிறார்கள். தமிழ்நாட்டு உயிரினப் பன்மய வாரியம் மட்டும் இச்சட்டத்தின் பல்வேறு பங்கீடு விதிகளை மீறிய 677 நிறுவனங்களுக்கு விளக்கம் கேட்டு குறிப்பாணை வழங்கியிருந்தது. இந்தச் சட்டத் திருத்தத்தின்படி, இந்த நிறுவனங்கள் தாங்கள் செய்யும் தவறுகளுக்கும் விதிமீறல்களுக்கும் அபராதத் தொகை செலுத்தினால் மட்டும் போதுமானது. பெரு நிறுவனங்களுக்கு அபராதத் தொகை செலுத்துவதில் எந்த சிக்கலும் இருக்காது. சிறைத்தண்டனை மட்டுமே அவர்களை மேற்கொண்டு தவறிழைப்பதில் இருந்து தடுக்கும். அது நீக்கப்பட்டிருப்பது இந்தச் சட்டத்தின் உண்மையான நோக்கத்தையே சிதைக்கும் படியாக உள்ளது.

# 10.சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத் திருத்த மசோதா 2023



**2023ல்** அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா சென்று திரும்பிய பிரதமர் மோடி பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளார். அவற்றுள் Crtical Mineral Investment Partnership ஒப்பந்தமும் ஒன்று. இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியா லித்தியம், பெரிலியம், டைட்டானியம், சிர்கோனியம் உள்ளிட்ட 30 விதமான கனிமங்களை முக்கியத்துவம் வாய்ந்த கனிமங்களாக (Crtical Minerals) அறிவித்துள்ளது. இந்தக்கனிமங்கள்தகவல், மின்னனு தொழில்நுட்பங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு பொருட்களைத் தயாரிக்க உதவுகின்றன. தற்போது கொண்டு வரப்பட்ட திருத்த சட்டத்தின்மூலம் தனியார் நிறுவனங்களும் மேற்கூறிய கனிமங்களை சுரங்கம் அமைத்து அகழ்ந்தெடுக்க அனுமதி வழங்கப்படும். ஏற்கெனவே ஆஸ்திரேலியாவுடன் இந்தியா இக்கனிமங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. ஜம்மு – காஷ்மீர் மற்றும் ராஜஸ்தானில் லித்தியம் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இச்சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டால் நாடெங்கிலும் சுரங்கங்களை அமைத்து காடுகள் அழிக்கப்படுவதற்கு வழிவகுக்கும்.

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு புவி வெப்பதாதலால் ஏற்படும் தீவிர வானிலை நிகழ்வுகள் இந்தியாவைக் கடுமையாகப் பாதித்து வருகின்றன. இந்த நிலையில் ஏற்கெனவே இருக்கும் சூழல் பாதுகாப்புச் சட்டங்களைப் நீர்த்துபோகச் செய்யும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் முயற்சிகள் அனைத்தும் கண்டனத்திற்குரியவை.

# 11. விவசாய தற்கொலைகள்



**2022ம்** ஆண்டிற்குள் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவதாக நரேந்திர மோடி வாக்குறுதி அளித்திருந்தார். இதே கோரிக்கையை முன் வைத்து பா.ஜ.க. 2019 தேர்தலை எதிர்கொண்டது. அதேபோல் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை (Minimum Support Price) 1.5 மடங்காக (150%) உயர்த்தி வழங்குவதாக 2014 ல் பா.ஜ.க. தேர்தல் வாக்குறுதி வழங்கியது. ஆனால் இரண்டையுமே பா.ஜ.க. நிறைவேற்றவில்லை.

குறைந்த பட்ச ஆதரவு விலையை150% உயர்த்துவதாகச் சொன்ன பா.ஜ.க. அரசு, கோதுமைக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை 47% ஆகவும், நெல்லுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை 50% ஆக மட்டுமே உயர்த்தியது. இதே காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கோதுமைக்கு 119% நெல்லுக்கு 134% குறைந்த பட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

2015-16 ல் இந்திய விவிசாயிகளின் சராசரி மாத வருமானம் 8000 ருபாயாக இருந்தது, பணவீக்கத்துடன் சேர்த்து அதன் இரண்டு மடங்கு என்பது 22,000 ருபாய், ஆனால், தற்போது விவசாயிகளின் மாத வருமானம் என்பது வெறும் 10,200 ரூபாயாக உள்ளது. இது இரண்டில் ஏதாவது ஒன்றை செய்திருந்தால் கூட தற்போது இந்த அளவிற்கு விவசாயிகள் தற்கொலை இந்தியாவில்

நடக்காமல் தவிர்த்திருக்க முடியும். கடந்த சில ஆண்டுகளில் நாடு முழுவதும் விவசாய தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன, 2017 ம் ஆண்டு தொடங்கி தற்போது வரை இந்தியாவில் விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களின் தற்கொலை எண்ணிக்கை ஏறுமுகமாகவே உள்ளது7.

2017 - 10,655

2018 - 10,349

2019 - 10,281

2020 - 10,677


2021 - 10,881

2022 - 11,287


இதில் வழக்கத்துக்கு மாறாக கடந்த இரண்டு ஆண்டுகளாக விவசாயிகளைவிட விவசாய கூலித் தொழிலாளர்களின் தற்கொலை எண்ணிக்கை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. தேசிய குற்ற ஆவணக்காப்பகம் வெளியிட்டிருக்க கூடிய 2022ம் ஆண்டிற்கான தரவுகளை வைத்துப் பார்த்தால் இந்தியாவில் 11,287 விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். ஒப்பீட்டளவில் பார்த்தால் ஒரு நாளைக்கு 30 விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்8.

கடந்த நான்கு ஆண்டுகளில் (2019-2023) பட்ஜெட்டில் விவசாயத் துறைக்கான நிதி ஒதுக்கீடு 4.4% இருந்து 2.5% ஆகக் குறைந்துள்ளது. இதில் பா.ஜ.க. அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 1 லட்சம் கோடியை செலவு செய்யாமல் திருப்பிக் கொடுத்திருக்கிறது. (2018-19ல் 21,043.75 கோடி, 2019-20ல் 34,517.7 கோடி, 2020-21ல் 23,824.53 கோடி, 2021-22ல் 21,005.13 கோடி)

# 12. அதிகரிக்கும் சுற்றுச்சூழல் செயற் பாட்டாளர்கள் மீதான வன்முறை:



**2016ல்** சூழலியல் செயற்பாட்டாளர்கள் மீதான கொலைகள் அதிகம் நடந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா நான்காமிடத்தில் உள்ளது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கப் போராடுபவர்களுக்கு எதிரான வன்முறை உலகளவில் அதிகரித்துள்ளது,2016 இல் மட்டும் உலகெங்கும் குறைந்தது 200 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று குளோபல் விட்னெஸ் அமைப்பு வெளியிட்டிருக்க கூடிய Defenders of the Earth அறிக்கை தெரிவிக்கிறது9.




Source: Global Evidence

சூழலியல் செயற்பாட்டாளர்கள் மீதான கொலைகள் படிப்படியாக மோசமாகி வரும் நாடுகளில் ஒன்றாக இந்தியா குறிப்பிடப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு சூழலியல் பிரச்சனைகளுக்காக போராடிய 16 செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதிவாசிகள் இந்தியாவில் கொல்லப்பட்டனர். இதில் ஒடிசாவில் உள்ள நியமகிரி மலைப் பகுதியில் சுரங்கப் பணிகளுக்காக தங்கள் பகுதியிலுள்ள இயற்கை வளங்களை அழிப்பதை எதிர்த்துப் போராடிய டோண்ட்ரியா கோந்த் பழங்குடிப் பிரிவை சேர்ந்த மண்டா கத்ரகா என்பவரின் கொலை குறிப்பிடத்தக்கது.

கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் சுரங்கம் மற்றும் மர கடத்தலுக்கு எதிராகப் போராடியவர்கள். 16 கொலைகளில் பத்து கொலைகளை காவல்துறைதான் செய்திருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. பா.ஜ.க. ஆட்சியில் ஆதிவாசிகள் உட்பட சுற்றுச்சூழல் ஆர்வலர்களை 'வளர்ச்சிக்கு எதிரான' குற்றவாளிகளாகப் தொடர் பிரச்சாரங்களின் மூலமாக சித்தரிப்பதுதான் இது போன்ற மோசமான நிலைமைக்குக்காரணம் என சொல்லப்படுகிறது.

# 13. காலநிலை மாற்றத் தடுப்பு, தகவமைப்பு நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள்:

**“கா**லநிலை மாறவில்லை நாம்தான் மாறிவிட்டோம், அதனால்தான் நமக்கு சாதாரண குளிரும் வெயிலும் அதிக குளிராகவும் அதிக வெயிலாகவும் தெரிகிறது” என05.09.2014 அன்று காலநிலை மாற்றத்தைப் பற்றிய எந்த புரிதலும் இல்லாமல்காலநிலை மாற்றத்தை மறுத்துப்பேசியிருந்தார் பிரதமர் மோடி. ஆனால், பன்னாட்டு காலநிலை உச்சி மாநாடுகளில் பல வாக்குறுதிகளை அளித்துவிட்டு வந்திருந்தார். இந்தியா 2070க்கு முன்பாக உமிழ்வில்லா நிலையை எட்டும் எனக் கூறியிருந்தார். இந்த இலக்கை ஒன்றிய அரசால் மட்டுமே எட்டிவிட முடியாது. மாநில அரசுகளின் பங்களிப்புதான் மிகவும் அவசியம் ஆனால், காலநிலை மாற்ற கொள்கைகள் குறித்து மாநில அரசுகளுடன் ஒன்றிய பா.ஜ.க. அரசு கலந்தாலோசனை செய்வதே கிடையாது.

COP 26 காலநிலை மாற்ற உச்சி மாநாட்டில் மோடி பஞ்சாமிர்த வாக்குறுதிகளை உலக நாடுகளின் தலைவர்களின் முன்தெரிவித்திருந்தார். அதன்படி,

- 2030ம் ஆண்டிற்குள் இந்தியா 500GW அளவிற்கு புதைபடிமம் இல்லாத ஆற்றலில் (non-Fossil energy) இருந்து மின்சாரம் தயாரிக்கும்.
- 2030க்குள் இந்தியாவின் 50% ஆற்றல் தேவை புதுபிக்கத்தக்க ஆற்றலின் மூலம் பூர்த்தி செய்யப்படும்.
- 2030க்குள் இந்தியாவின் கார்பன் உமிழ்வு ஒரு பில்லியன் டன்னாக குறைக்கப்படும்.
- 2030க்குள் இந்திய பொருளாதாரத்தில் கார்பனின் பங்கு 45% ஆக குறைக்கப்படும்.
- 2070க்குள் இந்தியா கார்பன் சமநிலையை அடைந்துவிடும்.

என இந்த ஐந்துத் திட்டங்களை வாக்குறுதிகளாக உலக நாடுகள் முன்பு தெரிவித்த மோடி இவற்றை நிறைவேற்றுவதற்கான தீவிர முன்னெடுப்புகளை இன்றுவரை மேற்கொள்ளவில்லை. இந்திய மக்களாகிய நமக்கெல்லாம் வடை சுட்டுக் கொடுத்த மோடி அவர்கள், உலகத் தலைவர்களுக்கு காலநிலை மாற்றத்தை தடுக்க வாக்குறுதிகள் என்ற பெயரில் பஞ்சாமிர்தம் கொடுத்ததுதான் மிச்சம்.

இந்தியாவிற்கான லட்சிய இலக்கான 2070ல் உமிழ்வில்லா நிலையை அடைய, நாட்டின் எரிசக்தி கலவையில் புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான ஆற்றலின் பங்கை தற்போது இருக்கும் 73% இல் இருந்து 2050 க்குள் 5% ஆக குறைக்க வேண்டும் என்றும் அது இந்தியாவின் இப்போதைய உற்பத்தி முறையில், தற்போதைய ஆற்றல் கொள்கையில் சாத்தியம் இல்லை என்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதே போல், 2015 ஆம் ஆண்டில், காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச ஒப்பந்தமான பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ், 2022 ஆம் ஆண்டுக்குள் 175 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க

எரிசக்தியை அடைய இந்தியா உறுதியளித்தது. ஆனால் கடந்த 2023ம ஆண்டுவரை வெறும் 119GW அளவிற்கான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கட்டமைப்புகளை மட்டுமே இந்தியா உருவாக்கியுள்ளது.

இதனால் உலக நாடுகளின் முன்பு இந்தியவிற்கு தலைகுனிவு ஏற்பட்டுள்ளது. பாஜக அரசின் இந்த செயலால் பாதிக்கப்படுவது இந்திய மக்கள் மட்டும் அல்ல; காலநிலை மாற்றத்தினால் பாதிக்கப்படப்போகும் பல கோடி உலகலாவிய ஏழை எளிய மக்களும்தான்.

# 14. கழிவு மேலாண்மை



இப்புவியால் கையாளக்கூடிய எல்லைகளைத் தாண்டி பன்மடங்கு அதிகமாக இன்று நெகிழிப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கார்பன் உமிழ்வுக்குக் காரணமான – நச்சுத்தன்மை கொண்ட – முழுமையாக மறுசுழற்சி செய்ய முடியாத – சுழற்சிப் பொருளாதாரத்திற்கு முரணான நெகிழிப் பொருட்களை அவற்றின் உற்பத்தியிலேயே கட்டுப்படுத்தாமல் நம்மால் நெகிழி மாசைக் கையாள முடியாது. நெகிழி குப்பையைக் கட்டுப்படுத்துவதில் உலகளாவிய ஒப்பந்தம் அவசியமாக இருக்கும் சூழலில், ஐநாவின் கீழாக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 'Global Plastic Treaty' எனப்படும் இந்த ஒப்பந்தம் வலுவானதாக அமைய உலக நாடுகள் ஒவ்வொன்றின் ஒத்துழைப்பு அவசியமானது.

2024 ஆம் ஆண்டுக்குள் வலுவான ஒப்பந்தத்தை உருவாக்க பெரும்பாலான நாடுகள் கடும் பிரயத்தனம் செய்துவரும் சூழலில் பா.ஜ.க. அரசோ எண்ணெய் வளமிக்க சவுதி அரேபியா போன்ற நாடுகளுடன் கூட்டு சேர்ந்து ஒப்பந்தத்தை நீர்த்துப்போகச் செய்ய பெருமுயற்சியெடுத்து வருகிறது. சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தும் வலுவான ஒப்பந்தத்துக்கு மாற்றாக நாடுகள் தாமே முன்வந்து தமக்கான கட்டுப்பாட்டு இலக்குகளை நிர்ணயித்துக் கொள்வதை மோடி தலைமையிலான ஒன்றிய அரசு பரிந்துரைக்கிறது.

எழுத்துப்பூர்வமாக தனது நிலைப்பாட்டை INC இல் தெரிவிப்பது அவசியமாக இருக்கும் சூழலில் அதனைத் தவிர்த்து சித்து விளையாட்டுகளில் ஈடுபடுகிறது. உலகின் பெரிய பொருளாதாரங்களில் ஒன்றான இந்தியாவின் நிலைப்பாடு வலுவான ஒப்பந்தத்துக்கு அத்தியாவசியமானதாக இருக்கும் சூழலில் பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசு நெகிழி மாசைக் கட்டுப்படுத்துவதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வாய்ப்பை குப்பையில் வீசியிருக்கிறது.

செல்லும் இடங்களிலெல்லாம் 'தூய்மை இந்தியா' பற்றியும் நெகிழிக் குப்பைகள் பற்றியும் பேசும் பிரதமர் மோடி, அதற்கு மாறாக உலக அரங்கில் நெகிழிக் கட்டுப்பாட்டுக்கு முட்டுக்கட்டையாகத் திகழ்வது அவரது இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதோடு, சூழல் நலனையும் மக்கள் நலனையும் பின்னுக்குத் தள்ளி அவரது கூட்டாளிகள் மீதான நலனிலேயே கவனம் செலுத்துவதை எடுத்துக் காட்டுகின்றது.

தனது பெருநிறுவன நண்பர்களின் வணிக நலன்களுக்காக தேசியக் கொடியையே பருத்தித் துணிக்குப் பதிலாக பாலியெஸ்டரில் (பாலியெஸ்டர்கள் எனப்படும் இழைகள் ஒருவகையான நெகிழி இழைகளே) உற்பத்தி செய்துகொள்ளாலாமென்ற உத்தரவை வெளியிட்டு அதே நேரத்தில் மக்களுக்குத் தேசிய வெறியூட்டி அதன் விற்பனையையும் பன்மடங்கு அதிகரித்தது மோடி தலைமையிலான ஒன்றிய அரசு.

நெகிழி மறுசுழற்சி என்பதே ஒரு மோசடிதான். எந்த நெகிழியையும் முழுமையாக மறுசுழற்சி செய்ய முடியாது. மேலும், மறுசுழற்சி அதிகமான சூழல் தாக்கங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. மறுசுழற்சியை முதன்மைப்படுத்துவது நெகிழி மாசைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக நிறுவனங்கள் மேலும் அதிக குப்பைகளை உற்பத்தி செய்து குவிக்கவே

ஏதுவாகிறது. மறுசுழற்சியானது கடுமையான சூழல் தாக்கங்களையும் உள்ளடக்கியதாக இருப்பதாலேயே வளர்ந்த நாடுகள் தங்கள் குப்பைகளை பின்தங்கிய மற்றும் வளரும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. இப்படி இருக்க பிரதமர் மோடியோ நெகிழிப் புட்டிகளை மறுசுழற்சி செய்து உருவாக்கப்பட்ட கோட்டை அணிந்தபடி பாராளுமன்றம் சென்று பெருநிறுவங்களின் விளம்பரப் பிரதிநிதிபோலவே நடந்துகொண்டார். இது நிஜமான மாற்றங்களை விடுத்து மறுசுழற்சிபோன்ற மோசமான போலித்தீர்வுகளிலேயே மோடியின் தலைமையிலான அரசு அக்கறை காட்டுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

மேலும், சிறு குறு வணிகர்கள் அதிகம் பயன்படுத்தும் நெகிழிப் பொருட்களுக்குத் தடை விதித்த ஒன்றிய அரசு நெகிழிக் குப்பைகளுக்கு மிக முக்கியக் காரணமான பெருநிறுவங்களின் நெகிழிப் பொட்டலங்களுக்கு பச்சைக் கொடி காட்டிவிட்டு அவற்றை அதற்கு பொறுப் பாக்குவதற்கான EPR (Extended Producers Responsibility) விதிகளை நீர்த்துப்போகச் செய்திருக்கிறது. இது தங்கள் குப்பைகளுக்கான பொறுப்பிலிருந்து பெருநிறுவங்களைத் தப்பிக்க வைத்திருப்பதோடு கையாள முடியாத அளவிற்கு குப்பைகளை அதிகரித்திருப்பதோடு உள்ளாட்சிகளின் சுமையையும் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது.

## 15. நதி நீர் இணைப்பு சிக்கல்

நதிநீர் இணைப்பினை 2014 தேர்தல் வாக்குறுதியாக முன்வைத்தது பா.ஜ.க. அரசு. சூழலியலாளர்களின் கடும் எதிர்புகளையும் மீறி30க்கும் மேற்பட்ட நதிகளை இணைக்க திட்டமிட்டபட்டிருந்த நிலையில் மத்திய பிரதேசத்தில் உள்ள கென்-பெட்வா நதிகளை இணைக்கும் திட்டதிற்கான பணிகள் தற்போது நடந்து வருகிறது15. கென்-பெட்வா நதிகள் இணைப்புத் திட்டம் மட்டும் நடைமுறைப் படுத்தப்பட்டால் பன்னா புலிகள் காப்பகத்தில் மட்டும் 9,000 எக்டர் நிலம் நீரில் மூழ்கும்16. நிபுணர்களின் எச்சரிக்கைகளை புறம்தள்ளிவிட்டு, சூழியல் அடிப்படைகளை புரிந்துகொள்ளாமல், லட்சக்கணக்கான கோடி மக்கள் வரிப் பணத்தை பயனளிக்காத ஒரு திட்டத்திற்கு சூழலை அழித்துச் செயல்படுத்துவது என்பது பாசிச பா.ஜ.க. வின் மிக பெரிய அராஜகம்.

# 16. கங்கை சுத்திகரிப்பில் தோல்வி

**பா.** ஜ.க. அரசாங்கம் 2014ல் கங்கையை மீட்டெடுப்பதற்காக நமாமி கங்கா எனும் திட்டத்தை அறிமுகப்படுதியது. இத்திட்டத்திற்கென நிதி நிலை அறிக்கையில் ரூபாய் 20,000 கோடி ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் இதில் வெறும் 7% நிதியே உத்தர பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் கங்கை ஆற்றில் உள்ள 71% கண்காணிப்பு நிலையங்களில் ப்பிகல் கோலிபாரம் என்று சொல்லப்படக்கூடிய மனித, மிருகக் கழிவுகளின் அளவு அபாயகரமாக உள்ளது17,18.

**Source:**

1. https://epi.yale.edu/epi-results/2022/component/epi
2. https://www.utilitybidder.co.uk/compare-business-energy/deforestation-report/
3. https://www.deccanherald.com/india/12l-hectares-of-forest-lost-in-5-nda-years-731210.html
4. https://www.iqair.com/dl/2023_World_Air_Quality_Report.pdf
5. https://aqli.epic.uchicago.edu/wp-content/uploads/2023/08/India-FactSheet-2023_Final.pdf
6. https://www.cseindia.org/Blue-sky-day-note-final.pdf
7. https://ncrb.gov.in/accidental-deaths-suicides-in-india-year-wise.html?year=2022&keyword=
8. https://thewire.in/agriculture/average-30-farmer-suicides-per-day-in-modi-govt-years-points-to-a-systemic-apathy
9. https://www.globalwitness.org/en/campaigns/environmental-activists/defenders-earth/
10. https://www.downtoearth.org.in/news/urbanisation/himalayan-plunder-how-hydropower-projects-in-the-hills-have-increased-disasters-there-87660
11. https://www.deccanherald.com/opinion/chardham-project-will-destroy-fragile-ecology-of-the-himalayas-881288.html

12. http://www.niti.gov.in/writereaddata/files/document_publication/doc1.pdf
13. https://scroll.in/article/1057612/fewer-discussions-faster-clearances-how-indias-wildlife-board-changed-since-2014
14. https://www.thehindu.com/news/national/9982-projects-in-forests-got-nod/article26261368.ece
15. https://scroll.in/article/1063068/a-decade-under-modi-environmental-protections-diluted-cheetah-project-falters
16. https://www.indiaspend.com/wp-content/uploads/2020/06/Environment-clearance-Ken-Betwa.pdf
17. https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=1895759
18. https://nmcg.nic.in/writereaddata/fileupload/19_Minutes%20of%2020th%20ARC%20&%20BRC%20-2023.pdf